செ.வெ.எண்:. 608 நாள்:. 31.10.2011.

# பத்திரிகைச் செய்தி வெளியீடு

# ஒரேமுறை தீர்வுத் திட்டம்

# [தமிழ்நாடு விற்பனை வரி (நிலுவைகளைத் தீர்வு செய்தல்) சட்டம்]

வணிகம் மற்றும் தொழில் அமைப்புகளின் கோரிக்கைகளை ஏற்று வரி நிலுவைத் தொகைகளை சலுகைகளுடன் ஒரே முறையில் செலுத்தித் தீர்ப்பதற்கு ஏதுவாக 2011ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (நிலுவைகளைத் தீர்வு செய்தல்) சட்டத்தினை தமிழக அரசு இயற்றியுள்ளது. இந்த சட்டம் 1.8.2011க்கு முன் கேட்பு எழுப்பப்பட்டு நிலுவையில் உள்ள 2006-07 வரையிலான வரிவிதிப்பு ஆண்டுகளுக்குரிய தமிழ்நாடு பொது விற்பனைவரி சட்டம் மற்றும் மத்திய விற்பனை வரி சட்டம் ஆகியவற்றின் கீழான வரி, தண்டத்தொகை மற்றும் வட்டி நிலுவைத் தொகைகளை வணிகர்கள் கணிசமான சலுகைகளுடன் செலுத்தித் தீர்க்க வகைச் செய்கிறது. இத்திட்டத்தின்படி வணிகர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட வரி நிலுவைத் தொகை முழுவதையும் 7.5% வட்டியுடனும் ஏற்றுக் கொள்ளப்படாத வரி நிலுவைத் தொகையில் 40 சதவீதத்தை அதன் மீது 7.5% வட்டியுடனும் செலுத்த வேண்டும். எஞ்சியுள்ள வட்டி மற்றும் தண்டத்தொகை முழுவதுமாக தள்ளுபடி செய்யப்படும். தண்டத்தொகை மற்றும் வட்டித் தொகை மட்டும் நிலுவையில் உள்ள இனங்களில், 10% தண்டத்தொகை மற்றும் 25% வட்டித் தொகையைச் செலுத்த வேண்டும். எஞ்சியுள்ள தண்டத்தொகை மற்றும் வட்டித் தொகை தள்ளுப்படி செய்யப்படும். இத்திட்டம் 1.11.2011

முதல் ஆறு மாத காலத்திற்கு நடைமுறைப்படுத்தப்பட உள்ளது. இத்திட்டத்தை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளுமாறு வணிகர்கள் மற்றும் தொழில் நிறுவனங்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். இத்திட்டம் குறித்த விவரங்களை தமிழ்நாடு வணிகவரித் துறையின் www.tnvat.gov.in. என்ற வலைதளத்தில் காணலாம்.

**சுனில் பாலீவால்**
அரசு செயலாளர்
வணிகவரி மற்றும் பதிவுத்துறை
சென்னை–600 009

---

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9